# பேட்டிணன் டீ. சசூரின் மொழிக் கட்டமைப்பு தர்க்கத்தில் ஏற்படுத்திய தாக்கம் : ஒரு மொழி மெய்யியல்சார் ஆய்வு

# The impact of Linguistics structure of Ferdinand de Saussure on Logic- A Linguistic Philosophical study.

**S. Jeganathan**


## Abstract:

*As language is the reflection of our thoughts, it has taken a major role in logical researches. Ferdinand de Sassure is linguistic philosopher, who was born in 1857 at Geneva capital city of Switzerland, had done pioneer researches on linguistics structure in the scientific perspective. Even though animals and plants are utilizing the language for communication, the human language is unique. Generally, we can divide a language into two parts such as written language and speech language. But, the people, who use the language, express their uniqueness in their speech. As a result, human being has been adding more new words in their language. This process brings new things as well as removes the old versions. These all progressions are being happened in the speech. Saussure thought that it was impossible to analyze these all things in language and he had tried to bring a limitation in linguistic structure. The method of linguistic structure is not a new one and also it isn't created one. It has been standing itself in the language and it is same to all languages of the world. This structure is identified by the human mind without the help of empirical experiences. This language structure modifies our written and spoken languages in a proper order in the light of the grammatical laws. The meaning of a word depends on the difference between the method of language and the symbols. We can relate this language structure with philosophy. Saussure's language structure has got the supremacy to explain verses which are used in Logic such as terms, prepositions, inferences, fallacies and symbolic languages in symbolic Logic. This paper attempts to research the Saussure's language structure and philosophical perspectives on language in the approach of philosophy of language. Secondary data have been utilized for this study and analytical method, comparative method and critical method are applied to analyze the data.*


**Key words:** Inference, Linguistic structure, Logic, Symbolic language, terms.

## 1. அறிமுகம்

மொழி பற்றிய கட்டமைப்பு வாதத்தினை மேலைத்தேயத்தில் தொடக்கி வைத்தவர் சசூர். இவர் சுவிசர்லாந்து நாட்டின் தலைநகரான ஜெனிவாவில் 1857இல் பிறந்தார். ஆரம்பத்தில் இயற்கை விஞ்ஞானங்களைப் பயின்ற இவர் பின்னர் மொழியியலைக் கற்கத் தொடங்கினார். சமஸ்கிருதம், பிரஞ்சு உட்பட பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். ஜெனிவா பல்கலைக்கழக மொழியியல் துறையின் பேராசிரியராக இருந்த போது நிகழ்த்திய விரிவுரைகளின் தொகுப்பாக ‘‘பொது மொழியியல் பற்றிய கற்கை’’ என்ற நூல் 1913 இல் சசூர் மரணமடைந்த பின்னர் அவரது மாணவர்களால் 1916 இல் வெளியிடப்பட்டது. சசூரின் மொழியியல் கொள்கையை தெளிவுபடுத்தும் இந்நூலானது மானிடவியல், சமூகவியல், புராணவியல், உளவியல், குறியீட்டு விஞ்ஞானம், தர்க்கவியல், இலக்கிய விமர்சனம், நாட்டார் வழக்கியல் எனப் பல்வேறு துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. இந்நூலின் முக்கிய ஆய்வு விடயமாக அமைவது மொழியாகும்.

## 2. ஆய்வு முறையியல் (Research Method)

இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவது விபரிப்பு, பகுப்பாய்வு, விமர்சன மற்றும் ஒப்பீட்டு முறையிலாகும். எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்சினை சார்பாக எழுத்துருவிலுள்ள ஆக்கங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யும் முறை இங்கு பின்பற்றப்படுகிறது. குறித்த பிரச்சினை தொடர்பாக மூல நூல்களிலிருந்தும் (Primary Sources) வழிநூல்களிலிருந்தும் (Secondary Sources) மேலதிக வாசிப்பு நூல்களிலிருந்தும் (Peripheral Readings) தரவுகள் பெறப்பட்டு இங்கு ஆய்வுகள் செய்யப்படுகின்றன.

## 3. ஆய்வின் நோக்கங்கள் (Objectives of the research )

- சசூரின் மொழிக் கட்டமைப்பின் அடிப்படை அம்சங்களை தெளிவுபடுத்திக் விளக்குதல்
- தர்க்கவியலின் அடிப்படைகளை விளக்குவதனூடாக மொழியியல் கூறுகள் சிந்தனையை கட்டமைப்பதில் பெறும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டல்.
- சசூரின் மொழிக் கட்டமைப்பினையும் தர்க்கவியலின் அடிப்படைகளையும் ஒப்பிட்டு ஆராய்வது ஆகிய நோக்கங்களை கொண்டதாக இந்த ஆய்வு காணப்படுகின்றது.

## 4. ஆய்வுப் பிரச்சினை (Research Problem)

மொழியில் காணப்படும் கவர்பாடுகளை தவிர்க்க முயலும் தர்க்கவியலின் அடிப்படைக் கருத்தியல் சிந்தனையை சசூரின் மொழிக் கட்டமைப்பு பற்றிய சிந்தனையானது முழுமையும் உள்வாங்கி அடையாளப்படுத்தியுள்ளதா

## 5. இலக்கிய மீளாய்வு

சசூரின் பொது மொழியியல் பற்றிய கற்கை மற்றும் ஒக்டன் (C. K.ogden) மற்றும் றிச்சாட் (I. A.Richards) என்பவர்களின் அர்த்தத்தின் அர்த்தம் எனும் நூல்களை ஒப்பிட்டு டேவிட் வெஸ்ட் (David West) (2005) எழுதிய "Language, thought and reality: a comparison of Ferdinand de Saussure's Course in General Linguistics with C. K. Ogden and I. A. Richards' The Meaning of Meaning என்ற கட்டுரையானது மொழி எவ்வாறு யதார்த்தத்துடன் தொடர்புபடுகிறது என்பதை மையமாகக் கொண்டதோடு அர்த்தத்தின் அர்த்தம் பற்றிய ஆய்வாகவே அமைந்த ஒரு ஒப்பிட்டுப் பார்வையாகும். இது சசூரின் முக்கிய இரண்டு எண்ணக்கருக்களாகிய குறி மற்றும் குறிப்பான் என்பனவற்றின் கூறுகளை முரணிலைத்தர்க்கம் ரீதியாகவும் தொகுப்பாய்வு ரீதியாகவும் கொண்டு அமைக்கப்பட்ட மொழியியல் மாதிரியாகவே காணப்படுகிறது. ஒக்டன் (C. K.ogden) மற்றும் றிச்சாட் (I. A.Richards) என்பவர்களின் சொல், சிந்தனை, பொருள் எனும் மூன்று கூறுகளையும் வைத்து செயற்பட பகுப்பாய்வையும் ஒப்பீட்டு பார்ப்பதாகும். எனவே எங்களது உள்ளம் சொற்களை எவ்வாறு கொண்டிருக்கிறது என்பதை உளவியலை அடிப்படையாகக் கொண்டு விளக்குவதாக அமைந்துள்ளது. இதனால் இது ஒரு தர்க்க ரீதியான ஆய்வு என்பதை விட ஒரு அறிவாராய்ச்சியியல் ரீதியான அர்த்தம் பற்றிய ஆய்வாகவே அமைந்துள்ளது.

ஆனால் பார்க்கின்சன் (C. Parkison: 2014) தனது "Linguistic and Mathematical Infinity" என்ற கட்டுரையில் சசூரின் மொழியியலை எண்ணியல் ரீதியாக விளக்க முற்பட்டார். இந்த ஆய்வில் மொழி எவ்வாறு ஒரு விடயத்தை உருவாக்குகிறது என்பது அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. சசூரினுடைய பொருள் கூட்டத்தின் தொகுப்பினை வெளிப்படுத்துவதே மொழி எனும் எண்ணக்கருவினை இவர் நிராகரிக்கும் அதேவேளை சசூரினுடைய அனுபவம் முதலான அறிவை ஏற்றுக்கொள்கிறார். அங்கு இவர் நோவம் சொம்ஸ்கி (Noam Chomsky) என்பவருடைய மொழி எண்ணக்கருக்களை ஒப்பீடு செய்து தெளிவுபடுத்துகின்றார். ஆனால் மொழி வெளிப்படுத்தும் உள்ளடக்கத்தினை கணித அடிப்படையிலேயே

விளக்க முற்படுகின்றார். இவரின் பார்வையில் மொழிக் கையாளுகை என்பது கணித ரீதியானது என்பதனை சமன்பாட்டுச் சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குகிறார். றோக்கோ பிட்டிரோ (Rocco Pititto) என்பவர் "The Linguistics of the 1900s from Ferdinand de Saussure to Gustave Guillaume Between Synchrony and Diachrony" என்ற ஆய்வினூடாக மொழியியலாளர்களும் மெய்யியலாளர்களும் எவ்வாறான எண்ணக்கரு ஆய்வின் போது தமது ஆழமான சிந்தனையினை வெளிப்படுத்துகின்றனர் என்பதை அடையாளப்படுத்தியிருந்தார். இந்த ஆய்வானது Saussure தொடக்கம் Gustave Guillaume வரை மொழியியல் கூறுகளில் காணப்படுகின்ற பண்புகளை மையப்பபொருளாக இருந்தது. Gustave Guillaume வின்படி சிந்தனை, செயற்பாடு என்பது மனித மொழியின் ஓர் தற்காலிக தோற்றமாகும். இது மொழியில் விமர்சன ரீதியான கட்டளைப்படிம வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது. இச்சிந்தனை எவ்வாறு சசூரின் மொழியியலில் காணப்படுகிறது என்பது பிரதான விடயமாகும். எனவே இந்த ஆய்வுகூட மொழிச்சிக்கல் மற்றும் அதன் விடுவிப்பு சம்மந்தமான விடயங்களையே முக்கியப்படுத்தியது. இது தவிர முத்துமோகன் முருகையன் முதலான ஆய்வாரள்களும் சசூரின் மொழிக்கட்டமைப்பை கோட்பாட்டுத்தளத்திலும் உளவியல் ரீதியாகவும் அறிவாராய்ச்சியியல் ரீதியாகவும் ஆராய முற்பட்டுள்ளனரே தவிர தர்க்கவியலோடு ஒப்பிட்டதான வகையில் இதுவரையும் பெரிதாக வெளிவராத நிலையில், அதனை வெளிக்கொணர்வதாக இந்த ஆய்வு அமைகிறது.

## 6. முடிவுகளும் கலந்துரையாடலும்

### 6.1 சசூரின் நோக்கில் மொழி

மொழியியலின் முக்கிய ஆய்வு நோக்கமாக அமைவது மொழியாகும். இத்தகைய மொழி பற்றிய ஆராய்ச்சியினை செய்த நவீன மொழியியலின் தந்தையாக சசூர் போற்றப்படுகின்றார். மனிதன் மட்டுமல்ல ஏனைய அ.்.றிணைப் பொருட்களில் அடங்கும் தாவரங்கள், விலங்குகள் கூட மொழியினைப் பயன்படுத்துகின்றவாயினும் மனிதர்களின் மொழி தனித்தன்மை வாய்ந்தது. பொதுவாக மொழியினைப் பேச்சு மொழி, எழுத்து மொழி என இரண்டாகப் பிரித்தாலும் ஒரு மொழியைப் பேசுகின்றவர்கள் தமக்கேயுரிய தனித் தன்மைகளைப் பேச்சில் பதிக்கின்றார்கள். இதனால் மனிதர்கள் மொழியில் புதிய சொற் சேர்க்கைகளைப் பயன்படுத்துகின்றார்கள். பழையன கழிந்து புதியன புகுகின்றது. இவையெல்லாம் பேச்சில் நிகழ்கின்றன. இவை அனைத்தையும் மொழியியலில் ஆய்வு செய்ய

முடியாது எனக் கருதிய சசூர் மொழியியலின் ஆய்வு விடயமாக மொழியினை கரிசனையோடு வரையறுக்க முற்படுகின்றார்.

இந்த மொழி பற்றிய ஆராய்ச்சியை நிகழ்த்துவதற்கு ஒரு முறையியலைத் தேடிய சசூர் வரலாற்று முறையை முன்மொழிந்தார். சசூருக்கு முன் மூன்று முக்கிய முறைமைகள் மொழியியலில் செல்வாக்குச் செலுத்தின. அவையாவன

1. தனித்தனி மொழிகளின் பொது இலக்கண விதிகளை அறிதல்
2. ஒப்பீட்டு முறை
3. வரலாற்று முறை (முத்துமோகன். ந., 1998: 4 )

19ம் நூற்றாண்டில் மொழி இலக்கண ஆய்வுகள் பின்தள்ளப்பட்டு ஒப்பீட்டு முறையும், வரலாற்று முறையும் ஆட்சி செலுத்திய காலத்தில் சசூர் பழைய இலக்கணவாதிகளைப் போல் மொழி நிலையை ஆய்வு செய்ய வேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்டு, இதற்கு வரலாற்று அணுகுமுறையே சிறந்தது என்றார். மொழி முறைமை மீது தனது கரிசனையை செலுத்திய சசூர் மொழியினை மனித மைய வாத சிந்தனையில் இருந்து கட்டமைப்பு வாத சிந்தனைக்கு மாற்றினார்.

### 6.2 சசூரின் கட்டமைப்புவாதத்தில் மொழிப்பரிணாமம்

சசூரின் கருத்துப்படி கட்டமைப்பு வாதம் தீவிரமான மனிதத்துவத்திற்கு எதிரான போக்கினை அதாவது சுயாதீன மனிதத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற இருப்பியல் வாதத்திற்கு சவால் விடக்கூடியதாக அமைந்திருந்தது. மனிதன் தன்னைத் தானே உருவாக்கிக் கொள்கின்றான் என்ற சாத்ரேயின் வார்த்தைகளுக்கு பதில் கொடுக்கும் வகையில் மனிதன் தன் உணர்வுகளை தனது கட்டமைப்புக்களுக்கு அப்பாற்பட்ட கட்டமைப்புக்களினால் உருவாக்கிக் கொள்கின்றான் என்ற கட்டமைப்பு வாதிகளின் கருத்துக்களுக்கு வலுச் சேர்க்கும் வகையில் சசூர், மொழி முறைமை அல்லது கட்டமைப்பு என்பது ஏலவே உள்ளது. அது புதியதல்ல. எல்லா மொழிகளுக்கும் பொதுவான ஒன்றாகும் என்றார். மேலும் நாங்கள் மொழியினைப் பேசுகின்றோம் என்பதைக் காட்டிலும் மொழி எங்களுடன் பேசுகின்றது என்பதுதான் உண்மை என்றார். இதனை மனித மனம் அனுபவத்தின் துணையின்றி அறிந்து கொள்கின்றது என்றார்.

மொழிப்பரிணாமம் மற்றும் அதற்கான காரணங்களைப் பற்றி பேசுவதற்காக சசூர் தனது 232 பக்கங்கள் கொண்ட புத்தகத்தில் 43 பக்கங்களை பரிணாம மொழியியல் ஆகவும், 39 பக்கங்களை இடைநிலை மொழியியல் ஆகவும் ஒதுக்கியிருந்தார்.

மொழிப்பரிணாமத்திற்குப் பல உள்ளக, வெளியக காரணங்கள் காணப்படுகின்றன. (முத்துமோகன் ந., 1998:7,8) அதுமட்டுமல்லாமல் கால ரீதியாக மொழி அமைப்புக்களுக்கிடையில் நிலவும் உறவுகளை மாற்றங்களை பயில்வது பரிணாம மொழியியல் எனவும் மொழியின் பொது எல்லைக்குள்ளேயே பேச்சில் ஏற்படும் மாற்றங்களை பயில்வது ஒலியியல் எனவும் சசூர் குறிப்பிடுகின்றார். ஒலி மாற்றங்கள், உச்சரிப்பு மாற்றங்கள் விரைவில் இலக்கண அமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.(Saussure. F., 1960:153-161) எனக் கூறும் சசூர் உடலியல் ரீதியான, உளவியல் ரீதியான இயற்கை சூழல் வகைப்பட்ட காரணங்களும், பண்பாட்டு அரசியல் மாற்றங்கள் வகைப்பட்ட காரணங்களும் மொழி மாற்றங்களுக்கு உந்துகோலாக அமைகின்றது. ஆனால் மொழி மெய்யியலாளர்கள் சசூர் குறிப்பிடும் காரணங்களை அப்படியே ஏற்றுக்கொள்வார்களா என்பது கேள்விக்குரியாகவே உள்ளது. ஏனெனில் ஒலியியல் மாற்றங்கள் விரைவில் இலக்கண விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன என்று சசூரே பிற இடங்களில் ஏற்றுக் கொள்கின்றார்.

மொழியியல் சார்ந்த பண்புகளை வெளிக்கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்ட சசூர் இரண்டு பரிமானங்களில் மொழி செயற்படுவதாகக் குறிப்பிடுகின்றார்.

1. இடமிருந்து வலம்
2. மேலிருந்து கீழ்

ஒரு மொழியில் காணப்படும் இடமிருந்து வலமான பண்பில் வாக்கியம் நேர்கோடு சார்ந்து சங்கிலித் தொடர் போன்று இணைந்து காணப்படும். இதன்படி ஒரு வாக்கியத்தினை எடுத்துக்கொண்டால் அதன் வார்த்தைகள் ஒன்றோடு ஒன்று இணைந்து காணப்படுவது எடுத்துக்காட்டப்படுகின்றது. அதேபோல் ஒரு வாக்கியத்தின் ஒவ்வொரு வார்த்தையும் வெவ்வேறு மதிப்பீடுகளைக் கொண்டிருக்கும் அதேவேளை வார்த்தைகளின் இணைப்பு ஒரு அர்த்தத்தினை இவ்வாக்கியத்திற்கு வழங்குவதை சுட்டிக்காட்ட முடியும். உதாரணமாக நான் இன்று ஒரு நல்ல படத்தைப் பார்த்தேன். என்ற வாக்கியத்தில் ஆறு கூறுகள் இருக்கின்றன. இந்த ஆறு கூறுகளும் தனித் தனியாக வெவ்வேறு மதிப்பீடுகளை (அர்த்தம்) கொண்டனவாக உள்ளன. ஆனால் இந்த கூறுகள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு வாக்கியமாக உருவாக்கப்படும் போதுதான் அது ஒரே ஒரு மதிப்பீட்டினை அல்லது அர்த்தத்தினை மட்டும் கொள்வதனை நாம் காணமுடியும். இந்த வாக்கியம் ஒழுங்கற்ற முறையில் அமைக்கப்படுமானால் அதாவது சொற்கள் இடம் மாற்றப்பட்டால் அது அர்த்தம் உள்ள வாக்கியமாக வராது. இதனை நாம் தர்க்கவியலில் அர்த்ததமற்ற

வாக்கியங்களை எடுப்புக்களாகக் கொள்ளமுடியாது என்ற எடுப்பளவியலோடு தொடர்புபடுத்த முடியும்.

மேலிருந்து கீழ் என்ற மொழிப்பரிணாமத்தில் முன்னர் குறிப்பிட்டதற்கு முரண்பாடாக தனிநபர் தேர்வுத் தன்மை காணப்படுகின்றது. இது தனி நபரின் மூளை அல்லது மன நிலையுடன் சம்பந்தப்பட்டதாக உள்ளது. அந்த வகையில் உளவியல் எண்ணக்கருவான ஞாபகத்துடன் இதனை தொடர்புபடுத்த முடியும். (வெடினன் டி. சசூர் ( தமிழில்: முருகையன்., 2003:121).

மேலிருந்து கீழ் உறவு நிலையானது தனித்தன்மை கொண்டதாகும். இந்தப் பண்பினை அதிக தனிநபர் தேர்வு தன்மையினைக் கொண்டதாகவும் ஆளுக்காள் வேறுபடும் தன்மையினைக் கொண்டதாகவும் சசூர் கூறுகின்றார். இந்த அடிப்படையில் இது உளவியல் நிலை சார்ந்தது. இந்நிலையில் உருவாக்கப்படும் வாக்கியங்களை எதிர்வு கூற முடியாது. இது முழுமையாக தனி நபரின் தேர்வில் தங்கியுள்ளது. எடுத்துக்காட்டாக

1. நாம் நாளை சந்திப்போம்
2. நீங்கள் இப்போது போகலாம்
3. நான் அடுத்து சாப்பிடுவேன்
4. அவன் விரைவில் வருவான்

மேற்குறிப்பிட்ட நான்கு வாக்கியங்களின் உருவாக்கமும், அவற்றைப் புரிந்து கொள்தலும் மேலிருந்து கீழ் என்ற பண்பினைக் கொண்டதாக காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் அது ஒரு தனிநபரின் விருப்பத் தேர்வாக இருப்பதனையும் கண்டுகொள்ள முடியும். இது தர்க்கவியலில் பேசப்படும் பதங்களுக்கிடையிலான தர்க்க ரீதியான தொடர்பு என்பதில் வரும் சமச்சீர் தொடர்பு, கடந்தேகு தொடர்பு என்பவற்றுடன் தொடர்புபட்டதாக உள்ளது.

### 6.3 சசூரின் கட்டமைப்பு வாதத்தில் மொழியின் வடிவக் கட்டமைப்பு

மொழியின் வடிவக் கட்டமைப்பு என்பது மொழியின் கருத்தியல் சார்ந்த, முறைமை சார்ந்த மற்றும் வழக்காறு சார்ந்த விதிகளை உள்ளடக்குகின்றது. இது குறிப்பிட்ட மொழியினை பேசுபவர்களிடம் இருந்து சுயமாக தன் இருப்பினைக் கொண்டிருப்பதுடன் அந்த மொழியினைப் பேசுபவர்களுக்கு முன்பாகவே தனது இருப்பினைக் கொண்டிருப்பதாக சசூர் குறிப்பிடுகின்றார். மொழியின் வடிவக் கட்டமைப்பு ஒரு மொழியின் அடிப்படை விதிகளை உள்ளடக்குகின்றது. மொழியில்

அடிப்படைக் கட்டமைப்பு இல்லாவிடின் ஒரு மொழியில் அர்த்தமுள்ள வாக்கியம் என்பது அசாத்தியமாகவே இருக்கும்.

வடிவக் கட்டமைப்புடன் தொடர்புபட்ட மற்றுமொரு விடயமாக சசூர் குறிப்பிடுவது தனிநபர் பேச்சு (parole). இது மொழியின் வடிவக் கட்டமைப்பின் அடிப்படையினாலேயே செயற்படுகின்றது. அந்த அடிப்படையில் இது மொழியின் வடிவக் கட்டமைப்பில் தங்கியுள்ளது. தனிநபர் பேச்சு மொழியின் வடிவக் கட்டமைப்பின் தனிநபர் சார்ந்த தோற்றப்பாடாக கருதப்பட வேண்டிய ஒன்று. மொழியின் வடிவக் கட்டமைப்பு என்ற விடயத்தின் மீது சசூர் தனது முழுக் கவனத்தைச் செலுத்திய போதும் தனிநபர் பேச்சு நடவடிக்கை பற்றிய ஆய்வானது மொழியின் கட்டமைப்புக்குள் மறைந்து கிடக்கும் பல்வேறுபட்ட கருத்துக்களை வெளிக்கொணர்வதாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டினார். உண்மையில் தனிநபர் பேச்சு என்பது மொழியின் வடிவக் கட்டமைப்பிற்குரிய உதாரணங்களாகவே இருக்கும் என சசூர் குறிப்பிட்டார்.

மொழியின் வடிவக் கட்டமைப்பு தனிநபர் பேச்சு என்ற கருத்துக்களை விளக்க சதுரங்க விளையாட்டினை சசூர் பயன்படுத்துகின்றார். சதுரங்க விளையாட்டின் விதிகளை மொழியின் வடிவக் கட்டமைப்பு என்ற கருத்திற்கும் விளையாட்டு வீரர் என்பதை தனி நபரின் பேச்சு என்ற கருத்திற்கும் ஒப்பிடுகின்றார். சசூரின் வடிவக் கட்டமைப்பு பற்றிய கோட்பாடு அடிப்படையில் குறிகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. சசூரைப் பொறுத்தவரையில் மொழி என்பது குறிகளைக் கொண்ட அமைப்பு (The system of signs) (முத்துமோகன், ந., 1998:10) ஒரு மொழியின் அடிப்படையான சிறிய பகுதியாக இருப்பது குறி. மனித மனம் அல்லது மூளையால் பலவகைப்பட்ட படிமங்களை உருவாக்க முடிகின்றது. அவை பொருள் பற்றியவை, உருவத்தைப் பற்றியவை, குணங்களைப் பற்றியவை (மரம், குதிரை, நல்லது, கெட்டது, சிறியது, பெரியது). அதேவேளை இன்னொரு புறம் மனிதனால் பலதரப்பட்ட குரல் வடிவங்களையும், ஒலிகளையும் எழுப்ப முடியும். இவற்றில் ஏதாவது ஒலி வடிவம் ஏதாவது மனப் படிமத்துடன் இணைந்து குறிப்பிட்ட படிமத்தைச் சுட்டுவதற்காக அமைந்து விடும் போது அந்த இணைப்பே குறி என்கின்றோம். உதாரணமாக மரம் என்ற பொருளைப் பற்றிய மனப் படிமத்தை ‘‘ம-ர-ம்’’ என்ற ஒலி குறிக்கத் தொடங்கும் போது அவை இரண்டும் சேர்ந்த மொத்த வடிவத்தை குறி என்கின்றோம்.

குறி இரு பகுதிகளாலானது.

1. குறிப்பான் (signifier)- ஒரு வார்த்தையின் அல்லது எழுத்தின் ஒலி வடிவம் அதாவது மரம் என்ற ஒலியாகும்.
2. குறிக்கப்படுவது (signified)- குறிப்பிட்ட வார்த்தையின் அர்த்தம் அல்லது எண்ணக்கரு. அதாவது மரம் பற்றிய மனப்படிமமாகும். இந்த குறிப்பானும் குறிக்கப்படுவதும் சேர்ந்த முழுமையே குறி என்கின்றோம்.(Saussure. F., 1960: 60-67, 112-113). இதுபோன்ற ஏராளமான குறிகளைக் கொண்ட அமைப்பே மொழி என்கின்றார்.

குறிகள் பற்றி விளக்கும் போது அவற்றின் இடுகுறித் தன்மை பற்றியும் பேசுகின்றார். அதாவது மரம் பற்றிய மனப் படிமத்திற்கும் (signified) மரம் என்ற ஒலிக்கும் (signifier) இடையில் எந்த சம்பந்தமும் கிடையாது. அப்படிமத்திற்கும், அவ்வொலிக்கும் எந்தவித உள்ளூடான இயல்பான தொடர்பும் கிடையாது. மாறாக அவற்றிற்கிடையில் நிலவுவது எதிர்மறை உறவே ஆகும். ஏதாவது ஓர் ஒலி ஏதாவது ஒரு மனப்படிமத்தை குறிக்கத் தொடங்குவது என்பது தற்செயலாக நிகழ்ந்தது, இடுகுறித்தனமானது எப்படியோ வழக்கில் வந்துவிட்டது(முத்துமோகன், நா., 1998:17) எனச் சசூர் கூறுகின்றார்.

### 6.4 அர்த்தம் பற்றிய சசூரின் நிலைப்பாடு

குறி என்பது ஒரு அர்த்தத்தின் அடிப்படைப்பகுதி. ஒரு குறியின் அர்த்தமானது அகவயமானதாகவும் மாறக்கூடியதாகவும் செயற்கையானதாகவும் காணப்படுகின்றது. சசூரின் கருத்துப்படி வார்த்தையின் அர்த்தம் என்பது அகவயமானதும், வழக்காறு சார்ந்ததும் ஆகும். சசூரைப் பொறுத்தவரை மொழி என்பது இயற்கையாக உருவாக்கப்பட்டது அல்ல. மாறாக செயற்கையாக உருவாக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட கருத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஒரு பொருள். ஒரு பொருள் அல்லது நிகழ்ச்சி வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு பெயர்களைப் பெற்றுக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டு வார்த்தையின் அர்த்தம் என்பது அகவயமானது எனக் கூறுகின்றார். ஒவ்வொரு குறிப்பானும் அதன் அர்த்தத்தினை ஏனைய குறிப்பானில் இருந்து வேறுபடுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்கின்றன. Pear என்பதன் அர்த்தம் பின்வரும் வகையில் ஏனைய வார்த்தைகளில் இருந்து வேறுபடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

P-e-a-r→ P-e-e-r P-e-a-k F-e-a-r B-e-a-k

இவ்வகையில் ஒரு வார்த்தையின் அர்த்தமானது மொழியின் வடிவக் கட்டமைப்புக்குள்ளும் குறிக்கும் இடையே இருக்கின்ற வேறுபாட்டில் தங்கியுள்ளது. குறி முறைமையினை நாம் நாணய மதிப்பீட்டு முறையோடு ஒப்பிட முடியும். ஒவ்வொரு நாணயமும் ஒவ்வொரு பெறுமதியினைக் கொண்டுள்ளது. இந்த வேறுபட்ட பெறுமதிகள் இந்த நாணயங்களின் மதிப்பினை ஏனைய நாணயங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. குறி ஒவ்வொன்றும் செயல் நோக்கம் உடையது. இது ஏனைய குறிகளில் இருந்து குறிப்பிட்ட குறியினை வேறுபடுத்திக் காட்டுகின்றது.

சசூரின் கருத்துப்படி ஒரு வார்த்தையின் அர்த்தம் என்பது சார்பு நிலைப்பட்டது. அதாவது ஒரு வார்த்தையின் அர்த்தம் அதற்கு அருகில் உள்ள அல்லது அதனோடு இணைந்து காணப்படுகின்ற ஏனைய வார்த்தைகளினால் தீர்மானிக்கப்படுகின்றது அல்லது புரிந்துகொள்ளப்படுகின்றது என்பதாகும். உதாரணம்- பிறப்பு - இறப்பு, இன்பம் - துன்பம் எந்த ஒரு வார்த்தையின் தொடர்ச்சி இல்லாமலும் நாம் எந்த ஒரு வார்த்தையினையும் வரையறை செய்யமுடியாது. இதனை தர்க்கவியலில் பேசப்படும் எதிர்ப்பதம், மறுதலைப்பதம் என்ற எண்ணக்கருவோடு தொடர்புபடுத்த முடியும்.

ஒரு வார்த்தையினை முழுமையாக விளங்கிக் கொள்வதற்கு அதனோடு தொடர்புபட்ட, ஓரளவிற்கு ஒற்றுமையுள்ள பல வார்த்தைகளின் துணையின்றி அதனை வரைவிலக்கணப்படுத்தவோ அர்த்தப்படுத்தவோ முடியாது.

உதாரணம் - Home- Hovel, Shed, Hut, House, Mansin, Palace

குழந்தை- பிள்ளை, இளைஞன், வயோதிபன்

எதிர்க்கருத்துள்ள சொற்களின் அர்த்தம் மற்றுமொரு சொல்லின் மூலம் அறிந்து கொள்ளப்படுகின்றது. ஆண் என்ற சொல் பெண் என்ற சொல்லினால் அறிந்து கொள்ளப்படுகின்றது. பெண் என்ற சொல்லின் அர்த்தம் ஆண் என்ற சொல்லினால் அறிந்துகொள்ளப்படுகின்றது. இதனைத் தர்க்கவியலில் வரும் சார்புப் பதத்தோடு தொடர்புபடுத்தி அறிந்துகொள்ளமுடியும். நாம் பயன்படுத்தும் மொழி உலகினை உள்ளடக்குகின்றது எனக் கூறும் சசூர் ஒரு பொருள் அல்லது நிகழ்வினைக் குறிக்க உலகிலுள்ள பல சமூகங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் காணப்படலாம் என்றார். இத்தகைய சசூரின் மொழியின் வடிவக் கட்டமைப்பு தொடர்பான சிந்தனை எவ்வாறு தர்க்கவியலோடு தொடர்புபடுகின்றது என்பதனை நாம் ஆரோய்வோம்.

## 6.5 தர்க்கவியல் பற்றிய அறிமுகம்

தர்க்கவியலில் என்பது ஆங்கிலத்தில் Logic என அழைப்பர். இது Logos என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியது. இந்த கிரேக்க சொல்லானது சிந்தனையோடும், மொழியோடும் தொடர்புபடுவதனால் சிந்தனை பற்றியதும் மொழி பற்றியதுமான ஆய்வே அளவையியல் ஆகும். சிந்தனை வளர்ச்சிக்கேற்ப மொழி வளர்ச்சியடைந்து வருவதனால் மொழியை ஆராய்வதற்கு தர்க்கவியலும் வளர்ச்சியடைய வேண்டியதாயிற்று. அந்தவகையில் தர்க்கவியலில் வடிவ அளவையியல் (Formal Logic), நவீன அளவையியல் (Modern Logic), பயனிலைத் தர்க்கம் (Predicative Logic) குறியீட்டு அளவையியல் (Symbolic Logic) தர்க்கப்படலை ( Gate Logic) முதலானவற்றைக் குறிப்பிடலாம். (ரவி. மு., 2012:1-4)

தர்க்கவியல் என்பது தொடக்க காலத்தில் அரிஸ்ரோட்டிலினால் அறிமுகம் செய்யப்பட்டது. சிந்தனையின் வெளிப்பாடான மொழி பதங்கள் எடுப்புக்களாலானது. இத்தகைய பதங்கள், எடுப்புக்கள் அதன் மூலம் உருவாக்கப்படும் வாதங்களை நியம விதிகளை அடிப்படையாக வைத்து விளக்குவது தர்க்கவியலில். இங்கு வாதங்களை வாய்ப்புப் பார்க்கும் போது வாதங்களில் உள்ளடங்கியுள்ள கூற்றுக்களின் பொருளுண்மையை நோக்காது வாதங்கள் வலிதாக இருப்பதற்குரிய நியம விதிகள் அல்லது வடிவங்கள் மாத்திரமே கவனிக்கப்படுகின்றது.( ஜமாஹீர். பீ.எம்., 2016: 1)

அரிஸ்ரோட்டிலினால் அறிமுகம் செய்யப்பட்ட தர்க்கவியலை உய்த்தறி அளவையியல் எனவும் அழைப்பர். உய்த்தறி அளவையியலானது உண்மை என ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் எடுப்பில் இருந்து அதன் உட்கிடையான ஒன்றை உய்த்தறிந்து கொள்வதாகும். உய்த்தறி அளவையியலில் இரு வகை அனுமான முறைகள் முக்கியம் பெறுகின்றன.

1. உடன் அனுமானம்
2. ஊடக அனுமானம்

உடன் அனுமானம் என்பது உண்மை என ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் எடுப்பில் இருந்து அதன் உட்கிடையான ஒன்றினை முடிவாக அனுமானிப்பதாகும். இங்கு தரவுக்கூற்று ஒன்றும், முடிவுக் கூற்று ஒன்றுமாக இரண்டு எடுப்புக்கள் காணப்படும்.

உதாரணம்: எல்லா மலர்களும் அழகானவையாகும்

ஆகவே சில மலர்கள் அழகானவையாகும்.

உடன் அனுமானம் 2 வகைப்படும்

1. எடுப்பு முரண்பாட்டு அனுமானம்
2. வெளிப்பேற்று அனுமானம்

எடுப்புக்களுக்கிடையிலான முரண்பாட்டைத் தெளிவுபடுத்துவது எடுப்பு முரண்பாட்டு அனுமானமாகும். அதாவது A E I O எனும் நால்வகை எடுப்புக்களில் ஏதேனும் ஒன்று மூல எடுப்பாகத் தரப்படும் பட்சத்தில் அதே எழுவாயையும் அதே பயனிலையையும் கொண்ட பிறிதொரு எடுப்பின் உண்மை பொய்யினைத் தீர்மானிக்கும் முறையாகும். எடுப்பு முரண்பாட்டு அனுமானம் மறுதலை, உப மறுதலை, எதிர்மறை, வழிப் பெறுகை என நான்கு வகைப்படும்.

வெளிப்பேற்று அனுமானம் என்பது உண்மை என ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மூல எடுப்பின் எழுவாயையோ, பயனிலையையோ அல்லது இரண்டிலுமோ மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் அதன் கருத்து மாறாத பிற எடுப்புக்களை முடிவாகப் பெறுவதாகும். வெளிப்பேற்று அனுமானமானது மறுமாற்றம், எதிர்மாற்றம், மறுமாற்ற எதிர்மாற்றம், எதிர்வைக்கை, மறுமாற்ற எதிர்வைக்கை, நேர்மாற்றம், மறுமாற்ற நேர்மாற்றம் என ஏழு வகைப்படும். வெளிப்பேற்று அனுமானத்தில் மிக அடிப்படையாக விளங்குவது மறுமாற்றமும் எதிர்மாற்றமும் ஆகும்.(ஜமாஹீர். பீ.எம்., 2016: 2,9)

உய்த்தறி அளவையியலின் அடுத்த பிரிவாக அமைவது ஊடக அனுமானமாகும். இதனை நியாயத் தொடை அனுமானம் எனவும் அழைப்பர். தமக்குள் ஒரு பொதுவான அம்சம் கொண்ட இரண்டு தரவெடு கூற்றுக்களில் இருந்து பிறிதொரு கூற்றை உட்கிடையாக அனுமானிப்பது நியாயத் தொடை அனுமானமாகும். இது எப்போதும் முக்கூற்று வடிவமாகவே காணப்படும்.

உதாரணம்: எல்லா மீன்களும் நீந்துபவையாகும்.

எல்லா மீன்களும் நீரில் வாழ்வனவாகும்.

∴ எல்லா நீரில் வாழ்பவையும் மீன்களாகும்.

நியாயத்தொடை இரு வகைப்படும்.

1. தூய நியாயத்தொடை

2. கலப்பு நியாயத்தொடை

தூய நியாயத்தொடை என்பது தமக்குள் பொதுவான அம்சம் ஒன்றை கொண்ட இரண்டு தரவெடு கூற்றுக்களும் ஒரே வகையான எடுப்பாகவும் முடிவுக் கூற்றும் அதே வகையினதான எடுப்பாகவும் கொண்டமைந்த வாத வடிவமாகும். இத்தூய நியாயத்தொடையானது தூய அறுதி நியாயத்தொடை, தூய நிபந்தனை நியாயத்தொடை, தூய உறழ்வு நியாயத்தொடை என மூவகைப்படும்.

கலப்பு நியாயத்தொடை என்பது தமக்குள் பொதுவான அம்சம் ஒன்றை கொண்ட இரண்டு தரவெடு கூற்றுக்களும் ஒரே வகையான எடுப்பாக அல்லாமல் அதிலிருந்து உட்கிடையாக அனுமானிக்கப்பட்ட முடிவுக் கூற்றும் அதே வகையினதான எடுப்பாக இல்லாமல் எடுப்புக்கள் கலந்து இருப்பது கலப்பு நியாயத்தொடை ஆகும். இக்கலப்பு நியாயத்தொடையானது கலப்பு நிபந்தனை நியாயத்தொடை, கலப்பு உறழ்வு நியாயத்தொடை, இருதலைக்கோள் வாதம் என மூவகைப்படும் . (ஜேம்ஸ் வெல்டன் மற்றும் மோனகன், ஏ.யே., 1967: 150, 151)

அரிஸ்ரோட்டிலினால் உருவாக்கப்பட்ட தர்க்கவியலின் முக்கிய தொனிப்பொருளாக அமைவது அனுமானமாகும். அனுமானங்களுக்கு அடிப்படையாக அமைவது எடுப்புக்களாகும். எடுப்புக்கள் பதங்களை உள்ளடக்கியது. எனவே தர்க்கவியலில் பதங்கள் பற்றிய சிந்தனையையும் நோக்க வேண்டியுள்ளது.

**6.6 தர்க்கவியலில் பதங்கள்**

தர்க்கவியலில் பதம் எனப்படுவது ஓர் எடுப்புக்களில் எழுவாயாகவோ அல்லது பயனிலையாகவோ வரக்கூடிய சொற்கள் அல்லது சொற் தொகுதிகளாகும். உதாரணம்: காகங்கள், குதிரைகள், கருமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். எல்லா பதங்களும் சொற்களாகும் அதேவேளை எல்லா சொற்களும் பதங்கள் இல்லை. பதங்கள் எப்போதும் வெளிப்படையாக கருத்தை தருவதாக இருக்க வேண்டும். வெளிப்படையாக கருத்தை தராத நல்லது, கெட்டது போன்றவைகளை பதங்களாகக் கொள்ளப்படுவதில்லை. பதங்கள் ஓர் எழுத்துச் சொற்களாகவும் உதாரணம்: பூ, கை, ஈ, தீ அதேபோன்று எழுத்துக்களின் கூட்டமான சொற்களாகவும் உதாரணம்: மனிதன், விலங்கு, பறவை அதேபோன்று சொற்றொடர்களாகவும் உதாரணம்: நல்ல மனிதன், அன்பான இரக்கமுள்ள மனைவி இடம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

பதங்கள் பற்றிய தர்க்கவியல் ஆய்வில் பதங்களின் கருத்துக் குறிப்பு, அகலக் குறிப்பு பற்றிய ஆய்வும் முக்கியம் பெறுகின்றது. கருத்துக் குறிப்பு என்பது ஒரு

பதம் தான் கூற வரும் கருத்தை விசேட பண்புகளின் அடிப்படையில் விபரித்துக் கூறுவது. இதன்படி குறிப்பான கருத்தும் உள்ளடக்கப்பட்டிருக்கும், அதேபோன்று சிறப்பான கருத்தும் உள்ளடக்கப்பட்டிருக்கும். உதாரணம்: பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவின் முதலாம் வருட மாணவர்கள்.

அகலக் குறிப்பு என்பது ஒரு பதம் தான் கூற வந்த கருத்தை குறிப்பாக விளக்கிக் காட்டுவதாகும். மாணவர்கள், ஆசிரியர்கள், பறவைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதில் மாணவர்கள் என்ற பதத்தை எடுத்துக்கொண்டால் கல்வி கற்கும் தகுதியுடையவர்களையே அது குறிப்பாக விளக்கிக் காட்டுகின்றது. பதங்களின் கருத்துக் குறிப்புத் தன்மை அதிகரிக்கும் போது அகலக் குறிப்பின் தன்மை குறைவடைந்து செல்வதும் அதே போல் அகலக் குறிப்பின் தன்மை அதிகரிக்கும் போது கருத்துக் குறிப்பின் தன்மை குறைவடைந்து செல்வதும் அவற்றிற்கிடையிலான தொடர்பை எடுத்துக் காட்டுகின்றது.

பதங்கள் பற்றிய தர்க்கவியல் ஆய்வில் பதங்களின் வகைகள் பற்றிய விளக்கம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1. தனிப்பதமும், பொதுப்பதமும்
2. விதிப்பதமும், மறைப்பதமும்
3. பண்புப்பதமும், பண்பில்பதமும்
4. சார்புப்பதமும், தனிப்பதமும்
5. சமுதாயப்பதமும், வியாப்திபதமும்
6. நிறைப்பதமும், குறைப்பதமும் . (ஜேம்ஸ் வெல்டன் மற்றும் மோனகன், ஏ.யே., 1967: 20)

பதங்கள் தொடர்பாகத் தர்க்கவியலில் முக்கியம் பெறும் மற்றுமொரு விடயம் பதங்களுக்கிடையிலான தர்க்க ரீதியான தொடர்பாகும். அந்தவகையிலேயே பதங்களுக்கிடையே இரு வகையான தொடர்புகள் உள்ளன.

1. சமச்சீர் தொடர்பு
2. கடந்தேகு தொடர்பு

சமச்சீர் தொடர்பு என்பது இரண்டு பதங்களுக்கிடையில் காணப்படும் தொடர்புகளைக் குறிக்கும். இது இரு வகைப்படும்.

1. சமச்சீர் உள்ள தொடர்பு
2. சமச்சீர் அற்ற தொடர்பு

கடந்தேகு தொடர்பு என்பது இரண்டு பதங்களுக்கிடையில் உள்ள தொடர்பைக் கொண்டு மூன்றாவது பதத்திற்கு கடந்து சென்று மூன்றாவது பதத்திற்கும், முதலாவது பதத்திற்கும் இடையில் தொடர்பு உள்ளதா? இல்லையா? என்பதை அனுமானிப்பதாகும். இது இரண்டு வகைப்படும்.

1. கடந்தேகு இயல்பு உள்ள தொடர்பு
2. கடந்தேகு இயல்பு அற்ற தொடர்பு

மொழியின் துரித வளர்ச்சி தர்க்கவியலில் உள்ளடக்கத்தில் இடம்பெறும் அனுமானம், அதற்கு அடிப்படையான பதங்கள் இவை இரண்டையும் அடிப்படையாக வைத்து வாதங்களின் வாய்ப்பினை துணிவது மட்டுமல்லாமல் குறியீடுகளைப் பயன்படுத்தி பல சொற்களை உள்ளடக்கிய வாதங்களைத் துணியும் குறியீட்டு அளவையியல், பயனிலைத் தர்க்கம், தர்க்கப்படலை, கார்னோ வரைபடம் போன்ற புதிய தர்க்கவியல் முறைகள் மொழி பற்றிய ஆய்வை இன்னும் அகலப்படுத்தியது.

நியம விதிகளுக்கு அப்பாற் சென்று வாதங்களின் வாய்ப்பினை துணியும் முறையும் தர்க்கவியலில் முக்கியத்துவம் பெற்றன. நியம விதிகளை அடிப்படையாக வைத்து வாதங்களின் வாய்ப்பினைத் துணியும் போது ஏற்படும் நியமப் போலிகள் பற்றியும் (எடுப்பு முரண்பாட்டனுமானப் போலிகள், நியாயத் தொடை அனுமானத்தில் இடம்பெறும் ஆறு வகைப் போலிகள்) நியம விதிகளுக்கு அப்பாற் சென்று வாதங்களில் இடம்பெறும் நியமமில் போலிகள் பற்றியும் (அறியாமைப் போலி, நலிவு தொகுத்தறி நியாயப் போலி) தர்க்கவியல் தனது கரிசனையைச் செலுத்தியுள்ளது.

### 6.7 தர்க்கவியலும் சசூரின் மொழிக் கட்டமைப்பும்

மேற்கூறப்பட்ட தர்க்கவியலின் ஆய்வு விடயங்கள் எவ்வாறு சசூரின் மொழிக் கட்டமைப்பில் காணப்படுகின்றது என்பதை நோக்குவதும் அவசியமானது. சசூரின் கருத்துப்படி ஒரு சொல்லின் அர்த்தம் எதிர்க் கருத்துள்ள சொற்களின் மூலம் விளங்கிக் கொள்ளப்படுகின்றது. உதாரணமாக ஆண் என்ற சொல் ஆண் அல்லாத (பெண்) என்ற சொல்லின் மூலம் அறியப்படுகின்றது. இதனை தர்க்கவியலில் விதிப்பதம், மறைப்பதம் என்ற எண்ணக்கருவுடன் தொடர்புபடுத்த முடியும். விதிப்பதம் என்பது தான் கூற வந்த கருத்தை விபரித்துக் கூறுவது. விதிப்பதமும், மறைப்பதமும் இணையும் போது உரையாடல் உலகு வெளிப்படுவதாக அளவையியலாளர்கள் கூறுகின்றனர். உதாரணமாக சசூர் குறிப்பிடும் ஆண் என்ற விதிப் பதம் உலகிலுள்ள ஆண்கள் ஒவ்வொருவரையும் குறித்துக் காட்டும். ஆண்கள் அல்லாதவர் எனும் மறைப் பதமானது ஆண்களைத் தவிர்த்து உலகிலுள்ள எல்லாவற்றையும் குறித்துக்

காட்டுகின்றது. விதியும் மறையும் இணைவதனால் உரையாடல் உலகு பெறப்படுகின்றது என்ற தர்க்கவியல் சிந்தனையைச் சசூர் வெளிப்படுத்தி இருக்கின்றார்.

சசூரின் கருத்துப்படி ஒரு மொழியில் இடம்பெறும் ஒரு வார்த்தையின் அர்த்தம் ஒரு வார்த்தை மற்றொரு வார்த்தையுடன் கொண்டுள்ள தொடர்பில் தங்கியுள்ளது. அதாவது ஒன்று இல்லாமல் மற்றதை விளங்கிக்கொள்ள முடியாது. உதாரணம்: இரவு-பகல், இன்பம்-துன்பம். இதனைத் தர்க்கவியலின் எதிர்மறைப்பதமும், மறுதலைப்பதமும் என்ற எண்ணக்கருவுடன் தொடர்புபடுத்த முடியும். எல்லா விதிப்பதங்களுக்கும் மறைப்பதங்கள் எதிர்மறையாகும். அதேபோன்று எல்லா மறைப்பதங்களுக்கும் விதிப்பதங்கள் எதிர்மறையாகும். எதிர்மறைப்பதங்கள் என்பவை விதியாகவோ அல்லது மறையாகவோ வரும் பதங்கள். மறுதலைப்பதம் என்பது எதிர்மறைப்பதங்களுக்கு நேர்மாறாகப் பயன்படுத்தப்படும் பதங்களாகும். எல்லா விதிப்பதங்களுக்கும் மறைப்பதங்களை உருவாக்க முடியும். ஆனால் எல்லா எதிர்மறைப்பதத்திற்கும் மறுதலைப்பதம் உருவாக்க முடியாது. உதாரணமாக மனிதன், மலர்கள், மாணவர்கள் போன்ற எதிர்மறைப்பதங்களுக்கு மறுதலைப்பதம் ஒன்று கூற முடியாது என்ற தர்க்கவியலின் விளக்கத்தைச் சசூர் தனது கட்டமைப்பு வாத விளக்கத்தில் உள்வாங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

சசூர் மொழி இரண்டு பரிமாணங்களில் செயற்படுவதாகக் குறிப்பிடுகின்றாா.

1. மேலிருந்து கீழ்
2. இடமிருந்து வலம்

இதனைத் தர்க்கவியலில் பதங்களுக்கிடையிலான சமச்சீர் தொடர்புடன் தொடர்புபடுத்த முடியும்.

A=B

B=C

ஆகவே A=C

இங்கு மேல் இருந்து கீழான உறவைக் காணமுடியும். அதேபோன்று கமலின் அண்ணா நிமல். நிமலின் அண்ணா விமல் இதனை பின் இருந்து செல்லும் போது அர்த்தமற்றதாக வரும். இது இடமிருந்து வலம் என்ற சசூரின் கருத்தோடு ஒப்பிடக்கூடியது.

சசூர் வாக்கியத்தில் உள்ள ஒவ்வொரு பதமும் (வார்த்தை) வெவ்வேறு மதிப்பீடுகளைக் கொண்டிருக்கும் அதேவேளை பதங்களை இணைக்கின்ற போது அர்த்தமுள்ள வாக்கியம் உருவாகுவதாகக் கூறுகின்றார். இதனை தர்க்கவியலில் எடுப்புக்கள் என்ற எண்ணக்கருவுடன் தொடர்புபடுத்த முடியும். ஒரு வாக்கியம் எடுப்பாக கருதப்படுவதற்கு சில நியமங்களை தர்க்கவியல் முன்வைத்துள்ளது. உதாரணமாக எழுவாய், பயனிலை, முடிக்கும் சொல், அளவுச்சொல் போன்றனவாகும். இவ்வாறு வேறுபட்ட பெறுமதிகளை உடைய பதங்கள் ஒன்றிணைக்கப்படும் போது எடுப்புக்கள் உருவாகின்றன என்ற விடயத்தை சசூருடன் தொடர்புபடுத்திப் பார்க்கமுடிகின்றது.

சசூர் வார்த்தைகளுக்கிடையிலான உறவு அகவயமானதும், மனித மூளையோடு சம்பந்தப்பட்டதாகவும் இருப்பதாகக் கூறுகின்றார். இதனைத் தர்க்கவியலில் எடுப்பு முரண்பாட்டு அனுமானம், நியாயத் தொடை அனுமானம் என்பவற்றோடு தொடர்புபடுத்திப் பார்க்க முடியும். எல்லா மீன்களும் அழகானவை ஆகவே எஞ்சியுள்ள மீன்கள் அழகானவை அல்ல என்ற முடிவினை சிலர் உண்மை என்றும் பொய் என்றும் சந்தேகம் என்றும் கூறுவர். எனவே இந்த விடயம் மனித மூளையோடு சம்பந்தப்பட்ட ஒன்றாக அமைகின்றது.

சசூரைப் பொறுத்தவரை மொழி என்பது அகவயமாக உருவாக்கப்படும் அதேவேளை மிகவும் பரந்துபட்டதும், ஆளுக்காள் வேறுபடும் தன்மை கொண்டதாகவும் உள்ளது. முரண்பாடான, எதிர்வுகூற முடியாத, சிக்கலான, சுயாதீனமான, புதுமையான அம்சம் கொண்டதான இந்தப் பண்பினை தனிநபர் பேச்சு (parole) என்ற கருத்தினூடாக சசூர் வெளிப்படுத்துவதை, நாம் தர்க்கவியலில் நியமமில் போலிகள் என்ற எண்ணக்கருவுடன் தொடர்புபடுத்த முடியும். நியமமில் போலிகள் என்பது சாதாரண உரையாடல்களில் ஏற்படுகின்ற ஐயப்பாடு, தெளிவின்மை, சிக்கல்கள் காரணமாக நிகழ்வதாகும். இதில் தர்க்கவியலாளர்கள் அறியாமைப் போலி, நலிவில் தொகுத்தறி நியாயப் போலி, மொழி ஒப்புவமைப் போலி, உச்சரித்தல் போலி, கவர்பொருட்பாட் போலி என பலவாறு வகைப்படுத்தியுள்ளனர். (ஜமாஹிர் பி.எம்:2016). இப்போலிகள் அடிப்படையில் சசூர் குறிப்பிடும் தனிநபர் பேச்சு என்ற விடயத்தோடு நெருங்கிச் செல்வதை நாம் அவதானிக்க முடியும்.

## 7. முடிவுரை

சசூரின் மொழிக் கட்டமைப்பானது 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் இயற்கை விஞ்ஞானங்கள் தோன்றிய காலத்தில் பயன்படுத்தப்பட்ட முறையியல்

கோட்பாடுகளை பிரயோகித்து பேச்சு மொழி, மொழித் தளம், மொழிப் பரிணாமம் என்ற சிந்தனைகளின் ஊடாக மிகப் பெரிய அளவில் மொழியைக் கடந்து பல்துறைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. ஆனாலும் பிற்காலத்தில் மொழிப் பரிணாமம் அல்லது மொழியமைப்பின் படைப்பு ரீதியான வளர்ச்சி பற்றிய ஆய்வுகளுக்கு அவர் போதுமான இடம் ஒதுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு ஒருபுறம் இருந்தாலும் சசூர் பேசும் இம்மொழிக்கட்டமைப்பு என்ற குறியீட்டு அளவையியல், வடிவ அளவையியல் போன்ற தர்க்கவியல் பிரிவுகளில் பேசப்படுகின்ற பதங்கள், எடுப்புக்கள், அனுமானங்கள், நியமமில் போலிகள் குறியீடுகள், தர்க்க மாறிகள், மாறிலிகள் முதலானவற்றை விளக்கக்கூடிய ஆற்றலுடையது. சசூரின் மொழிக்கட்டமைப்பானது நாம் எழுதுகின்ற வாக்கியங்களை யதார்த்தத்திற்கு ஏற்ற அர்த்தமுடையதாக மாற்றி இலக்கண விதிகளுக்கு ஏற்ப ஒழுங்கமைக்கின்றது. ஆனால் தர்க்கவியல் முழுக்க முழுக்க எடுப்புக்களையும், அனுமானங்களையும் குறியீடுகளையும் கொண்டு மொழியினை விபரித்துக் காட்டும் அதேவேளை அது யதார்த்த நிலைமைகளையோ இலக்கண விதிகளையோ கருத்தில் கொள்வதில்லை. தர்க்கவியல் நியம விதிகளை மட்டும் கருத்திற்கொண்டு வாதங்களின் வாய்ப்பின்மையை விளக்கிச் செல்கின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. அப்புள்ளாச்சாரி கே.ஆர் (1961), **ஐரோப்பிய அளவையியல்**, சென்னை : அமுதா நிலையம்.
2. டயஸ் குணரட்ண ( தமிழில்: மு. ரவி) (2012), **அளவையியலும் விஞ்ஞான முறையும்**, மட்டக்களப்பு : மகுடம் பப்ளிகேஷன்.
3. ஜமாஹீர். பீ.எம்., (2013), **நவீன அளவையியல்**, கண்டி : நதா வெளியீடு.
4. ஜமாஹீர். பீ.எம்., (2016), **அளவையியலும் அளவையியயல் கோட்பாடுகளும்**, மருதமுனை : நதா வெளியீடு.
5. ஜேம்ஸ் வெல்டன் மற்றும் மோனகன், ஏ.யே., (1967), **இடைநிலை அளவையியல்** (தமிழ்மொழி பெயர்ப்பு), கொழும்பு : இலங்கை அரச கரும மொழி திணைக்களம்.
6. பேடினன் டி. சசூர் ( தமிழில்: முருகையன்) (2003), "மொழிக் குறியின் இயல்பு" **பனுவல்** சென்னை : புகழேந்தி வெளியீடு.
7. Christopher. D., & Robert, J.C.,(1989), **The Elements of Logic** 5th Edition, New York : M.C Graw Hill.
8. Copi I.M and Cohen. C.,(2000), **An Introduction to Logic**, 9th Edition, New Delhi.: Prentice – Hall of India Private Ltd.
9. Chomsky Noam,(1966), **Cartesian Linguistics**, New York : Harper & Row Publication.
10. Culler, J., (1976), **Saussure**, Fontane.
11. Donald Kalish and Richard Montague, (1964), **Logic Techniques of Formal Reasoning,** New York.: Harcourt, Brace and word, Inc.

12. Frank C. Parkinson (2014), **Linguistic and Mathematical Infinity,** Retrieved from http://www.jstor.org/stable/27758114 .
13. John Kelly., (1997), **The Essence of Logic,** New Delhi : Prentice -Hall of India Private Ltd.
14. Pititto, R., (2015) **The Linguistics of the 1900s from Ferdinand de Saussure to Gustave Guillaume Between Synchrony and Diachrony**, Retrieved from https://link.springer.com/chapter/10.1007/978-3-319-24895-0_25
15. Saussure. F., (1960), **Course in General Linguistics**, London : Peter Owen Ltd.
16. West, D., (2006) **Language, thought and reality: a comparison of Ferdinand de Saussure's Course in General Linguistics with C. K. Ogden and I. A. Richards' The Meaning of Meaning**
    Retrieved from http://dx.doi.org/10.1080/13586840500164631